என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 217, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

217—

புதிய ஊராட்சி

***37436 திரு. வீ.பி. நாகைமாலி:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா —

கீழ்வேளூர் தொகுதியிலுள்ள அகரக்கடம்பனூர் ஊராட்சியை இரண்டாகப் பிரித்து, வடக்குவெளியை புதிய ஊராட்சியாக அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை வணங்குகிறேன்.*

கீழ்வேளூர் தொகுதி, அகரக்கடம்பனூர் ஊராட்சியை இரண்டாகப் பிரித்து, வடக்குவெளி ஊராட்சி என்று புதிய ஊராட்சியை உருவாக்க கருத்துரு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லையென்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி அவர்கள்.*

திரு. வீ.பி. நாகைமாலி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கீழ்வேளூர் தொகுதி, கீழ்வேளூர் ஊராட்சி ஒன்றியத்தில் அடங்கியுள்ள அகரக்கடம்பனூர் ஊராட்சி*

2015 செப்டம்பர் 3]

பரப்பளவில் பெரிய ஊராட்சியாக உள்ளது. அகரக்கடம்பனூர், கோயில்கடம்பனூர், ஸ்ரீகண்டிநத்தம், பாண்டி சோழமங்கலம், முடிகொண்டான், நாங்குடி, வல்லமங்கலம், வடக்குவெளி, நேரு நகர் தெற்கு, பிள்ளைத்தெரு வாசல், ஆலக்கரை, மட்டக்குளம், வேலூர், புத்தர்மங்கலம், வெற்றிவாழ்க்கை ஆகிய 15 குக்கிராமங்கள் இந்த ஊராட்சியில் அடங்கியுள்ளன. தற்போது வடக்குவெளி மற்றும் அகரக்கடம்பனூர் என இரண்டு வருவாய்க் கிராமங்களாகப் பிரிக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகின்றன. 15 குக்கிராமங்களை உள்ளடக்கி பரப்பளவில் பெரிய ஊராட்சியாக இருப்பதால், ஊராட்சியின் நிருவாகத்தை நல்லமுறையில் செயல்படுத்துவதிலும், மக்கள் நலத் திட்டங்களைக் கொண்டுபோய்ச் சேர்ப்பதிலும் நிருவாக ரீதியாக சிரமம் ஏற்படுகின்றது. எனவே, தற்போது செயல்பட்டுக் கொண்டிருக்கிற வடக்குவெளி வருவாய்க் கிராமம் மற்றும் அகரக்கடம்பனூர், வருவாய்க் கிராமம் என்ற அடிப்படையில் இந்த ஊராட்சியை இரண்டாகப் பிரித்து, வடக்குவெளி ஊராட்சி எனத் தனியாக ஓர் ஊராட்சியை உருவாக்கினால், இரண்டு ஊராட்சிகளை எளிதாக நிருவகிக்கவும், மக்கள் நலத் திட்டங்களை விரைவாகக் கொண்டு செல்லவும் முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. நாகைமாலி, கேள்வியைக் கேளுங்கள் என்றால், விரிவாகப் பேசிக் கொண்டிருக்கிறீர்கள். (குறுக்கீடு) எல்லா ஊர் பெயர்களையும் படித்துக் கொண்டிருக்கிறீர்கள். (குறுக்கீடு) நீங்கள் கேள்வியை மட்டும் கேளுங்கள். (குறுக்கீடு) சுருக்கமாகக் கேளுங்கள். (குறுக்கீடு) நீங்கள் சுருக்கமாகச் சொல்லுங்கள்.

திரு. வீ.பி. நாகைமாலி: ஊராட்சியைப் பிரிப்பதற்கான காரணத்தைச் சொல்கிறேன். எனவே, அந்தப் பகுதி மக்களின் நலன் கருதி, அகரக்கடம்பனூர் ஊராட்சியை இரண்டாகப் பிரித்து, வடக்குவெளி ஊராட்சி என்கிற புதிய ஊராட்சியை உருவாக்கித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

[2015 செப்டம்பர் 3

முற்பகல் 10-35

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாணை எண் 131, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, உள்ளாட்சி அமைப்புகளின் நிலையை உயர்த்துதல், பிரித்தல் மற்றும் சேர்த்தல் தொடர்பான நடைமுறைகள் குறித்து இந்த ஆணையின்படி, கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களைப் பிரித்தல், தரம் உயர்த்துதல் மற்றும் சேர்த்தல் தொடர்பாக சம்பந்தப்பட்ட ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியம்மூலமாகத் தீர்மானம் இயற்றப்பட்டு, சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பப்பட வேண்டும். அத்தீர்மானம் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் கூட்டம் நடத்தப்படும். அக்கூட்டத்தில், மாவட்டத்திலுள்ள அனைத்து சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் தேர்ந்தெடுக்கப்படக்கூடிய தலைவர்கள், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளினுடைய மாவட்டச் செயலாளர்கள், பெயர்பெற்ற தன்னார்வத் தொண்டு அமைப்புகள், குடியிருப்போர் நலச் சங்கத்தின் பிரதிநிதிகள் ஆகியோரின் கருத்துகள் பெறப்படும். அந்தக் கருத்துகளின் அடிப்படையில், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் கோரிக்கைகளின் அவசியம் குறித்து ஆய்வு செய்யப்பட்டு, அவசியம் என கருதும்பட்சத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர் அவர்களுக்குக் கருத்துரு அனுப்பி வைக்கப்படும். மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து பெறப்படும் கருத்துருவை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர், தனது பரிந்துரையுடன் அரசுக்கு அனுப்பி வைப்பார். அக்கருத்துரு அரசால் பரிசீலனை செய்யப்பட்டு, உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.*

கீழ்வேளூர் தொகுதி, அகரக்கடம்பனூர் ஊராட்சியை இரண்டாகப் பிரித்து, வடக்குவெளி ஊராட்சி என்ற புதிய ஊராட்சியை உருவாக்குவதற்கான கருத்துரு எதுவும் இதுவரை அரசால் பெறப்படவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி அவர்கள்.*

2015 செப்டம்பர் 3]

திரு. வீ.பி. நாகைமாலி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடக்குவெளி ஊராட்சி என்ற புதிய ஊராட்சியை உருவாக்க வேண்டுமென்ற கருத்துரு ஏற்கெனவே அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. இருந்தாலும், நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஊராட்சியை இரண்டாகப் பிரிப்பதற்கு என்னென்ன செய்ய வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். அந்த வகையிலே செய்வோம். ஆகவே, இந்த ஊராட்சியை இரண்டாகப் பிரித்துத் தர வேண்டுமென்று மீண்டும் மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, அந்தக் கருத்துரு அரசால் பெறப்பட்டால், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் செல்லப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.

முனைவர் கோவி. செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவிடைமருதூர் சட்டப் பேரவைத் தொகுதியில் திருவிடைமருதூர், திருப்பனந்தாள் என இரண்டு ஊராட்சி ஒன்றியங்கள் இருக்கின்றன. இரண்டு ஊராட்சி ஒன்றியங்களிலும் 45-க்கும் மேற்பட்ட ஊராட்சிகள் இருக்கின்றன. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திருவிடைமருதூர் ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து, நாச்சியார்கோவிலைத் தலைமையிடமாகவும், திருப்பனந்தாள் ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து பந்தநல்லூரைத் தலைமையிடமாகவும் கொண்டு புதிய ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களை அமைத்துத் தந்து, நிருவாக வசதியை சீர்படுத்தித் தருவார்களா என்பதையும், இதுகுறித்து ஏற்கெனவே அரசின் பரிசீலனையில் இருக்கிறதா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட ஊராட்சி ஒன்றியங்களைப் பிரிப்பது குறித்து சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து அரசுக்குக் கருத்துரு வரப்பெற்றால், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் செல்லப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், கிட்டத்தட்ட 18 சட்டமன்ற உறுப்பினர்கள் இதுபோன்ற கேள்விகளைக் கொடுத்துள்ளார்கள். ஆகவே, எந்த ஊராட்சியைப் பிரிப்பதென்றாலும் சரி, ஒன்றியத்தைப் பிரிப்பதென்றாலும் சரி, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு கண்டிப்பாகப் பரிசீலனை செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன் அவர்கள்.

திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில் தளி ஊராட்சி ஒன்றியம் என்பது 50 ஊராட்சிகளைக் கொண்ட, மலைக் கிராமங்களைக் கொண்ட, பரப்பளவில் பெரிய ஊராட்சி ஒன்றியம் ஆகும். தளி ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து, அஞ்செட்டியை மையமாகக் கொண்டு புதிய ஊராட்சி ஒன்றியம் அமைக்கப்படும் என்று கடந்த 2013 ஆம் ஆண்டு இதே அவையில் அறிவிக்கப்பட்டது. அறிவிக்கப்பட்டு மூன்று ஆண்டுகள் நிறைவுபெறும் நிலையில், இதுவரையில் அதற்கான அரசாணை பிறப்பிக்கப்படவில்லை. ஆகவே, அறிவிக்கப்பட்ட அஞ்செட்டி ஊராட்சி ஒன்றியம் எப்போது நிருவாக ரீதியாக செயல்பாட்டுக்கு வரும் என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

2015 செப்டம்பர் 3]

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்த ஊராட்சியைப் பொறுத்தவரையில், நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, தீர்மானம் இயற்றப்படும்பொழுது, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் கூட்டம் நடத்தப்படும்பொழுது, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சென்றிருப்பார்கள். அப்படி, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கலந்துகொண்டு, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநருக்குக் கருத்துரு அனுப்பப்பட்டால், இயக்குநர் அவர்கள் அதுகுறித்து முடிவு செய்து அரசுக்குக் கருத்துரு அனுப்பியிருந்தால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசால் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) அதைத்தான் சொல்கிறேன். சட்டமன்றத்தில் அறிவித்தால்கூட, அதற்கு என்னென்ன விதிமுறைகள் இருக்கின்றன என்பதை நான் ஏற்கெனவே இங்கே தெரிவித்தேன். அந்த விதிமுறைகளின்படி மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசுக்குக் கருத்துரு வரப்பெற வேண்டும். கருத்துரு வரப்பெற்ற பிறகுதான் அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 218, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. பவுன்ராஜ், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

218—

பகுதிநேர கால்நடை கிளை நிலையம்

***7357—திரு. சு. பவுன்ராஜ்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பூம்புகார் தொகுதி, குத்தாலம் ஒன்றியம், திருவாடுதுறை கிராமத்தில் பகுதிநேர கால்நடை கிளை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?